அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 2/91

அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம், கொழும்பு. 7
1991, பெப்ரவரி மாதம் 12 ஆந் திகதி

சகல அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாணச் சபைகளின் தலைமைச் செயலாளர்கள்,
ஆளுநர்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள்,
மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுக்களின்
செயலாளர்கள்.
உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள்/விசேட ஆணையாளர்கள்/
அரசாங்க கூட்டுத்தாபனங்களின்/அரச பொறுப்பேற்ற நிறுவனங்களின்/
வர்த்தக நிறுவனங்களின் தலைவர்கள்/பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளுக்கும்.

**உயர் பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்களுக்கான**
**ஒழுக்க நெறிக் கோவை.**

அமைச்சரவையின் அதிகாரத்தின் கீழ் அரசாங்க அச்சக திணைக்களத்தினால் அச்சிடப்பட்ட ஒழுக்க நெறிக் கோவையை தாபன விதிக்கோவையின் ஓர் பகுதியாகக் கொண்டு அரசாங்க, உள்ளூராட்சி அரசாங்க கூட்டுத்தாபன மற்றும் வர்த்தக நிறுவனங்களில் உயர்பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்களுக்கு பொருந்தும் விதத்தில் ஆக்கல் வேண்டுமென அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

02. இதன்படி தாபன விதிக்கோவைக்கு தேவைப்படும் திருத்தங்களை மேற்கொள்ள நடவடிக்கைகளை எடுக்கப்படுவதுடன் மாகாணச் சபை, உள்ளூராட்சி நிறுவனங்கள், அரசாங்க கூட்டுத்தாபனங்கள், அரசுக்கு பொறுப்பேற்ற நிறுவனங்கள்/வர்த்தக நிறுவனங்கள் நடைமுறைக் கைநூலையும் திருத்துவதற்கான நடவடிக்கைகளை அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும். குறிப்பிடப்பட்ட ஒழுக்க நெறிக் கோவையின் அச்சிடப்பட்ட பிரதிகளை அரசாங்க அச்சக அதிபதியிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

ஒப்பம்: ஆர். அபேரத்ன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு.

பிரதி– செயலாளர், நிதி
அச்சக அதிபதி